# திருப்பூர் மாநகராட்சி

**2020 ஜுலை மாதம் 08-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1067 முதல்1073 வரை**

**21-07-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1074 முதல் 1084 வரை**

**30-07-2020-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1085 முதல் 1099 வரை**

**திருப்பூர் மாநகராட்சி**

**2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1067)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3, முத்தணம்பாளையம் கிராமம் க.ச.எண். 480 / 2A2, 2B-ல் 5.375 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திட்ட அனுமதி கோரி M/s. Dharun Mithra Infras Pvt. Ltd., திருப்பூர் அவர்கள் விண்ணபித்துள்ளனர்.

உத்தேச மனைப்பிரிவிற்கு அனுமதி கோரும் விண்ணப்பத்தினை பரிசீலித்து நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21714/2019/TCP-3 நாள் 13-12-2019-ல் மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றினை காட்டும் சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் அனுப்பியுள்ளார்.

சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்திற்கேற்ப, மனுதாரர்கள் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால், சிறுபாலம், குடிநீர் பிரதானக் குழாய் ஆகிய இதர அடிப்படை வசதிகள் மாநகராட்சியால் பின்பற்றப்படும் தரத்தில் அமைத்துள்ளனர். மேலும் 25 மின்கம்பங்கள் அமைக்க ரூ.25,000/- வீதம் ரூ.6,25,000/- ஏக்கருக்கு ஒவ்வொரு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.5,000/- வீதம் ரூ.26,850/-ஐயும் மாநகராட்சி கருவூலத்தில் 30-06-2020 தேதியன்று செலுத்துச் சீட்டு எண். 032 /501 / 5 / 20-21/999, 032 /501 / 5 / 20-21/ 998-ல் செலுத்தி உள்ளனர். மேலும் பூங்காவின் எல்லைகளில் கம்பி வேலி அமைத்து பெயர் பலகையும் நிறுவியுள்ளனர்.

எனவே நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சாலை அமைப்பு ஒப்புதல் வரைபடத்தின்படி அமைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலை மற்றும் பூங்கா இடங்களை பத்திர பதிவு எண். 4746/ 2020 நாள் 10-06-2020 " **ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி** " என்ற பெயரில் 1 எண். இணைசார்பதிவாளர் அலுவலகத்தில் தானமாக பதியப்பட்டு உள்ளது. எனவே தான சாசனப் பத்திரத்தின்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலை மற்றும் பூங்கா இடங்களை மாமன்றத்தின் பராமரிப்புக்கு ஏற்றுக் கொள்வது குறித்தும், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமத்தில் அளிக்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்குவது குறித்தும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ.1 / 1353 / 2019 ம.3)

-------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.**

--------

**1068)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு பணிகளுக்காக வீடுகள் தோறும் கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், தகவல்கள் சேகரிக்கும் படிவங்கள் மற்றும் அறிக்கைகள் தயார் செய்ய வேண்டியுள்ளது. மேலும் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் இம்மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவு செய்யும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு நிதியுதவி வழங்கவும் மற்றும் பட்டியல் தயார் செய்து திருப்பூர்

**1068-ன் தொடர்ச்சி**

சார்பு நிலைகருவூலத்திற்கு பட்டியல் அனுப்ப வேண்டியுள்ளதால் கீழ்காணும் எழுதுபொருட்கள் மற்றும் டோனர்கள் தேவைப்படுகிறது.

| வ.எண். | எழுது பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்கு(White Paper A.4 Size (ஒரு மாதத்திற்கு) | 60 ரீம் |
| 2. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்கு - Toner 12 A ( ஒரு மாதத்திற்கு) | 10 எண்ணிக்கை |
| 3. | முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி பணிகளுக்கு-White Paper A.4Size (ஒரு வருடத்திற்கு) | 60 ரீம் |
| 4. | முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி பணிகளுக்கு-Toner 12 A ( ஒரு வருடத்திற்கு) | 25 எண்ணிக்கை |
| 5. | பொது சுகாதாரம் இருக்கைப் பிரிவு இருக்கை பணிகளுக்கு ஒரு வருடத்திற்கு | |
| | ( White Paper A.4 Size) | 150 ரீம் |
| | (White Paper Legal) | 120 ரீம் |
| | ( Toner - 12A) | 50 எண்ணிக்கை |

மேற்காணும் எழுது பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் ( ரூபாய் பத்து ,லட்சம்) ஆகும். அரசு அங்கீகாரம் பெற்ற திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்ட சாலை லிமிட் K.924, திருப்பூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கும், பட்டியல் தொகை வழங்குவதற்கும், உத்தேச செலவீனத்திற்கும் மாமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். **( அ.**1 / 3635 / 2020 **)**

-----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**1069)** திருப்பூர் மாநகராட்சியானது 01-01-2008 முதல் தரம் உயர்த்தப்பட்டு பின்னர் நல்லூர் மற்றும் 15 வேலம்பாளையம் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 கிராம பஞ்சாயத்துக்களை இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்டு திருப்பூர் மாநகராட்சியாக 25-10-2011-ல் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்பூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 159.35 சதுர கிலோமீட்டராகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படிமக்கள் தொகை 8,77,778 ஆகும். 2010ஆம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 10,20,000ஆகும். மாநகராட்சியில் உள்ள மொத்த மழைநீர் வடிகால் நீளம் 1429.32 கி.மீ. ஆகும். இதில் கச்சா மழைநீர் வடிகால் 1409.88 கி.மீ. மூடுவடிகால் நீளம் 19.352கி.மீ.ஆகும்.

இம்மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், பள்ளமாக உள்ளதாலும், கச்சா வடிகாலின் கொள்ளளவு குறைவாக உள்ளதாகவும், மழைகாலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதில் தேக்கம் ஏற்பட்டு, சாலைகளில் கழிவுநீர் தேக்கமடைந்து வழிந்தோடும் நிலையில் உள்ளதால் சுகாதாரமற்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே மாநகராட்சி பகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால் கட்டவும், சாலைகள் ஏற்படுத்தவும் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள பின்வருமாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

**1069-ன் தொடர்ச்சி**

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| 1. | 1 | வார்டு எண்.01-க்குட்பட்ட தண்ணீர் பந்தல் காலனி கிழக்கு வீதி பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | | 270 | | 8.50 | 25.00 |
| 2. | 2 | வார்டு எண்.02க்குட்பட்ட ஆத்துப்பாளையம் AD காலனியில் புதிய தார்தளம் அமைத்தல் | | 100 | | 4.50 | 6.50 |
| 3. | 3 | வார்டு எண்.03க்குட்பட்ட நெசவாளர் காலனி 3-வது வீதியில் புதிய தார்தளம் அமைத்தல் | | 360 | | 5.00 | 24.50 |
| 4. | 4 | வார்டு எண்.04க்குட்பட்ட திருக்குமரன் நகர் 1வது மற்றும் 2வது வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | 440 | | 5.00 | 23.50 |
| 5. | 4 | வார்டு எண்.04க்குட்பட்ட வெங்கமேடு மகாலட்சுமி பேக்கரி வீதி பகுதியில் புதிய தார்தளம் அமைத்தல் | | 250 | | 5.00 | 17.50 |
| 6. | 5 | வார்டு எண்.05க்குட்பட்ட சௌபாக்கியா நகர் பகுதியில் மறுதார்தளம அமைத்தல் | | 280 | | 4.50 | 13.50 |
| 7. | 6 | வார்டு எண்.06க்குட்பட்ட சிவானந்தர் முதல் வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | | 180 | | 7.50 | 15.00 |
| 8. | 6 | வார்டு எண்.06க்குட்பட்ட சிவானந்தர்குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | | 160 | | 6.50 | 11.00 |
| 9. | 7 | வார்டு எண்.07-க்குட்பட்ட ஏ.வி.பி.லே-அவுட்3வது வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | 260 | | 5.00 | 13.50 |
| 10. | 7 | வார்டு எண்.07-க்குட்பட்ட பயர் சர்வீஸ் காலனி முதல் ஏ.வி.பி. ஜே.எஸ். கார்டன் வரை மறுதார்தளம் அமைத்தல் | | 475 | | 5.00 | 24.60 |
| 11. | 8 | வார்டு எண்.08-க்குட்பட்ட ராஜீவ்காந்தி வீதி பகுதியில்+ தார்தளம் புதுப்பித்தல் | | 190 | | 7.50 | 13.00 |
| 12. | 8 | வார்டு எண்.08-க்குட்பட்ட ராஜீவ்காந்தி வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | 200 | | 4.00 | 9.00 |
| 13. | 9 | வார்டு எண். 09-க்குட்பட்ட நேதாஜி வீதியில் மறு தார்தளம் அமைத்தல் | | 420 | | 6.00 | 27.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| 14. | 10 | வார்டு எண்.10-க்குட்பட்ட வ.உ.சி. நகர் 1வது வீதி, காந்தி நகர் குறுக்கு வீதி மற்றும் ஓலப்பாளையம் (நேசனல் பள்ளி வீதி) பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல் | 390 | | | 6.50 | 25.00 |
| 15. | 11 | வார்டு எண்.11-க்குட்பட்ட சண்முகா நகர் மெயின்கிழக்கு மேற்கு வீதி மற்றும் லட்சுமி தியேட்டர் பிரதான சாலை (மகாலட்சுமி பேக்கரி முதல் விநாயகர் கோவில்) வரை தார்தளம் புதுப்பித்தல் | 320 | | | 7.00 | 25.00 |
| 16. | 12 | வார்டு எண்.12-க்குட்பட்ட முருகம்பாளையம் இட்டேரி சாலையில் (அவினாசி சாலை முதல் மாகாளி அம்மன் கோவில் வரை) மறுதார்தளம் அமைத்தல் | 350 | | | 8.00 | 26.90 |
| 17. | 13 | வார்டு எண்.13-க்குட்பட்ட துவாரகை நகர் 1வது மற்றும் 2வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 510 | | | 4.80 | 24.60 |
| 18. | 13 | வார்டு எண்.13-க்குட்பட்ட காமராஜர் நகர் 1வது மற்றும் 2வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 500 | | | 4.80 | 24.20 |
| 19. | 14 | வார்டு எண்.14-க்குட்பட்ட ரங்கநாதபுரம் ஏ.டி.காலனி 1வது, 2வது, 3வது மற்றும் குறுக்கு வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 630 | | | 4.00 | 25.60 |
| 20. | 15 | வார்டு எண்.15க்குட்பட்ட வெங்கடேஷ்வரா நகர் பிரதான சாலை,மகாலட்சுமி நகர், மகாலட்மி நகர் குறுக்கு வீதி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | 420 | | 6.00 | 25.20 |
| 21. | 16 | வித்யகணபதி வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் தார்தளம் அமைத்தல் | | 490 | | 4.30 | 23.15 |
| 22. | 17 | செந்தில்நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் அண்ணா நகர் 3வது வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | | 320 | | 4.10 | 25.00 |
| 23. | 18 | சொசைட்டி காலனி மற்றும் திருமலை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் புதுப்பித்தல் | | 250 | | 4.20 | 24.70 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| 24. | 19 | திருநகர் தெற்கு வீதி மற்றும் திருவள்ளுவர் வீதி பகுதியில் மழைநீர்வடிகால் மற்றும் தார்தளம் புதுப்பித்தல் | | 390 | | 4.30 | 27.20 |
| 25. | 20 | அவினாசி நகர் சாலையில் மறுதார்தளம் அமைத்தல் | | | 435 | 7.50 | 23.50 |
| 26. | 21 | ராதாநகர் பகுதியில் புதிதாக தார்தளம்அமைத்தல் | | | 315 | 6.00 | 25.00 |
| 27. | 22 | பாப்பண்ணன் நகர் 3வது வீதி குறுக்கு வீதி மற்றும் பாப்பண்ணன் நகர் 4வது வீதி ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | 370 | | | 6.00 | 25.00 |
| 28. | 23 | முத்துநகர் விரிவு பிரதான சாலையில் மறுதார்தளம் அமைத்தல் | | 340 | | 9.50 | 23.50 |
| 29. | 24 | பிரிஜ்வே காலனி மற்றும் பேப்ரிகேசன் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் மறுதார்தளம் அமைத்தல் | | | 240 | 7.30 | 24.00 |
| 30. | 25 | ராம்நகர் 4வது வீதி மற்றும் கங்கா நகர் 1வது வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | | 460 | 9.15 | 32.00 |
| 31. | 26 | திருமலை நகர் 4வது வீதி மற்றும் குறுக்கு வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | | 380 | 6.00 | 24.00 |
| 32. | 27 | திருநீலகண்டபுரம் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | | | 330 | 9.50 | 22.50 |
| 33. | 28 | பாரதி நகர் பிரதான சாலையில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | | | 120 | 5.80 | 25.00 |
| 34. | 29 | இந்திரா நகர் குறுக்கு வீதி, ஸ்ரீநகர் குறுக்கு வீதி மற்றும்பிச்சம்பாளையம் புதூர் பெட்ரோல் பங்க் எதிர்வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | | | 445 | 5.30 | 24.40 |
| 35. | 30 | ராஜா நகர் 1வது, 2வது மற்றும் 3வது வீதி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | | 473 | 5.00 | 25.60 |
| 36. | 31 | வார்டு எண்.31-க்குட்பட்ட கே.பி.என்.காலனி 5வது, 6வது வீதி மற்றும் 4வது, 5வது, 6வது குறுக்கு வீதிகள் ஆகிய பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | 600 | | 7.30 | 49.00 |
| 37. | 32 | வார்டு எண். 32-க்குட்பட்ட பாளையக்காடு பள்ளி வீதி, | 915.00 | | | 5.25 | 50.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| | | 2வது, 3வது, 4வது, 5வது குறுக்கு வீதிகள், பெரிய குழந்தையப்பா நகர் மற்றும் சின்ன குழந்தையப்பா நகர் மேற்கு 2வது, 3வது மற்றும் 4வது வீதிகள் ஆகிய பகுதிகளில் தார்தளம் மறு சீரமைத்தல் | | | | | |
| 38. | 33 | வார்டு எண்.33-க்குட்பட்ட மாடர்ன் சிட்டி 3வது குறுக்கு முதல் 4வது குறுக்கு கிழமேல் வீதி மற்றும் 4வது குறுக்கு வீதி வடக்கு மற்றும் தெற்கு வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் புதிதாக தார்தளம் அமைத்தல் | | | 155 | 4.80 | 25.00 |
| 39. | 35 | வார்டு எண்.35-க்குட்பட்ட பெருந்தொழுவு பிரதான சாலை சந்திப்பு முதல் காளிபாளையம் பகுதி வரை தார்தளம் மறு சீரமைத்தல் | | | 800 | 4.00 | 33.50 |
| 40. | 36 | வார்டு எண்.36-க்குட்பட்ட வீரபாண்டி சாலை முதல் பிள்ளையார் நகர் வரை தார்தளம் மறு சீரமைத்தல் | | 515 | | 5.50 | 30.00 |
| 41. | 37 | வார்டு எண்.37-க்குட்பட்ட வெங்கடேஸ்வரா நகர் 1வது வீதி, வடபுறம் 1வது, 2வது, 3வது குறுக்கு வீதி மற்றும் தென்புறம் 1வது குறுக்கு வீதி ஆகிய பகுதிகளில் புதிதாக தார்தளம் அமைத்தல் | | 415 | | 4.40 | 20.00 |
| 42. | 38 | வார்டு எண்38-க்குட்பட்ட ஜெ.எஸ்.கார்டன் விரிவு மற்றும் விரிவு பிரதான வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் மறு சீரமைத்தல் | | 255 | | 4.50 | 27.50 |
| 43. | 39 | வார்டு எண்.39-க்குட்பட்ட ஜெய்நகர் விரிவு 2வது, 3வது, 4வது வீதிகள் மற்றும் போஸ்ட் ஆபீஸ் வீதியில் தார்தளம் மறுசீரமைத்தல் | | 715 | | 5.00 | 39.00 |
| 44. | 42 | வார்டு எண்.42-க்குட்பட்ட நேரு நகர் பிரதான சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டி மறுதார்தளம் அமைத்தல் | | 300 | | 6.00 | 22.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| 45. | 43 | வார்டு எண்.43-க்குட்பட்ட புஷ்பா நகர் 3வது வீதியில் மறு தார்தளம் அமைத்தல் | | 205 | | 10.00 | 22.00 |
| 46. | 44 | வார்டு எண்.44-க்குட்பட்ட கதிர் லே-அவுட் பிரதான சாலை பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | 470 | | 7.00 | 35.00 |
| 47. | 45 | வார்டு எண்.45-க்குட்பட்ட எம்.ஜி.புதூர் 1வது வீதி பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | 200 | | 7.00 | 15.00 |
| 48. | 45 | வார்டு எண்.45-க்குட்பட்ட துளசிராவ் வீதி ( சென்னை சில்க்ஸ் எதிர்புறம் ) பகுதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | | 240 | | 5.30 | 14.00 |
| 49. | 47 | வார்டு எண்.47-க்குட்பட்ட இந்திராநகர் 2வது வீதியில் தார்தளம் சீரமைத்தல் | | 340 | | 7.00 | 20.00 |
| 50. | 46, 48 | வார்டு எண்.46 மற்றும் 48-க்குட்பட்ட சூசையாபுரம் மெயின்ரோட்டில் சாலையை அகலப்படுத்தி மறுதார்தளம் அமைத்தல் | | 450 | | 13.20 | 60.00 |
| 51. | 50 | வார்டு எண்.50-க்குட்பட்ட பூம்புகார் நகர் கிழக்கு பகுதியில் தார்தளம் சீரமைத்தல் | | 711 | | 6.60 | 50.00 |
| 52. | 51 | வார்டு எண்.51-க்குட்பட்ட சோமு லே-அவுட் 2வது வீதியில் புதிய தார்தளம் அமைத்தல் | | | 120 | 6.00 | 10.00 |
| 53. | 52 | வார்டு எண்.52-க்குட்பட்ட அமராவதி நகர் 1வது மற்றும் 2வது வீதியில் புதிய தார்தளம் அமைத்தல் | | | 250 | 4.20 | 15.00 |
| 54. | 52 | வார்டு எண்.52-க்குட்பட்ட திருக்குமரன் நகர் மணி மருந்தகம் முதல் மூகாம்பிகை நகர் சந்திப்பு வரை தார்தளம் சீரமைத்தல் | | 750 | | 4.50 | 35.00 |
| 55. | 53 | வார்டு எண்.53-க்குட்பட்ட அமராவதி நகர் விரிவு மற்றும் காளிகுமரன் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல் | | 465 | | 4.50 | 25.00 |
| 56. | 56 | வார்டு எண். 56-க்குட்பட்ட சிவசக்தி நகர் 1வது, 2வது மற்றும் 4வது வீதியில் தார்தளம் சீரமைத்தல் | | 508 | | 7.10 | 40.00 |
| 57. | 57 | வார்டு எண்.57-க்குட்பட்ட பிரபு நகர் குறுக்கு வீதி மற்றும் சுபாஷ் பள்ளி வீதி | | 1205 | | 4.20 | 50.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் பெயர் | சேதமடைந்த சாலைகளின் நீளம் | | | | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குடிநீர் திட்டம் (மீட்டரில்) | பாதாள சாக்கடை திட்டம் (மீட்டரில்) | இயற்கை பேரழிவுகள் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | |
| | | பின்புற ரோட்டில் தார்தளம் சீரமைத்தல் | | | | | |
| 58. | 58 | வார்டு எண்.58-க்குட்பட்ட வஞ்சிபாளையம் மெயின்ரோட்டில் தார்தளம் சீரமைத்தல் | | 715 | | 4.00 | 31.00 |
| 59. | 59 | வார்டு எண்.59-க்குட்பட்ட புவனேஸ்வரி நகர் மெயின் வீதியில் தார்தளம் அமைத்தல் | | 350 | | 4.00 | 16.00 |
| 60. | 60 | வார்டு எண்.60-க்குட்பட்ட விவேகானந்த 1வது வீதி மற்றும் குறுக்கு வீதியில் தார்தளம் சீரமைத்தல் | | 570 | | 4.50 | 28.00 |
| | | மொத்தம் | 3995.00 | 15614.00 | 4523.00 | | 1536.65 |

திருப்பூர் மாநகராட்சியின் பல்வேறு வார்டுகளில் அம்ரூத் 2017-20 மற்றும் சீர்மிகு நகர் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் புதிய குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமும், அத்தியாவசிய பணியாக உள்ளது மற்றும் தென்மேற்கு பருவ மழை துவங்கி உள்ள இக்காலத்தில் மழைநீர் தேங்குவதால் பொது மக்களிடமிருந்து அதிகமாக புகார்கள் வருவதுடன் போக்குவரத்து ஸ்தம்பித்து, பொது மக்களுக்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. எனவே மேலே குறிப்பிட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1536.65 இலட்சம் மதிப்பீட்டில் 60 பணிகளை மேற்கொள்வதற்கு மாநகராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை என்பதால் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ( IUDM 2020-21) 2020-21-ன் கீழ் பணிகளை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 3871 / 2020)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1070)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4, வார்டு எண்.57-ல் உள்ள முருகம்பாளையம் பகுதியில் உள்ள மண்டல அலுவலகத்தில் உள்ள பழைய கட்டிடங்களை M/s. MSTC Limited, சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் E-Auction முறையில் இடித்து அப்புறப்படுத்துவதற்கு மாமன்றம் தனது தீர்மான எண். 887, நாள் 21-02-2020-ல் ஒப்புதல் அளித்துள்ளது. திருப்பூர் மாநகராட்சிக்கும் M/s. MSTC Limited, சென்னை என்ற நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)13-01-2020-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி M/s. MSTC Limited, சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் மண்டல அலுவலக கட்டிடத்தினை E-Auction முறையில் இடித்து அப்புறப்படுத்த கடந்த 18-06-2020 அன்று ஏலம் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்ட நிறுவனங்களில் M/s. R.K Traders. என்ற நிறுவனத்தார் அதிக ஏலக் கேள்வியாக ரூ.1,05,205/-க்கு ஏலம் கோரியுள்ளார்கள். மேற்படி M/s. R.K. Traders என்ற நிறுவனம் ரூ.26,301/-ஐ வைப்புத் தொகையாக M/s. MSTC Limited, சென்னை என்ற நிறுவனத்தில் செலுத்தி ஏலம் கோரியுள்ளார்கள். மேற்படி ஏலத்தொகை ரூ.1,05,205/-

**1070-ன் தொடர்ச்சி**

சந்தை நிலவரப்படி உள்ளது. எனவே மேற்கண்ட ஏலத் தொகையை உறுதி செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. வைப்புத் தொகை ரூ.26,301/-ஐ மாமன்றத்தின் அனுமதி கிடைத்தவுடன் திருப்பூர் மாநகராட்சிக்கு செலுத்துவதாக M/s. MSTC Limited, சென்னை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மேலும் ஏலம் கோரிய தொகையான ரூ.1,05,205/-ல் வைப்புத் தொகை ரூ.26,301/- போக மீதம் ரூ.78,904/-ஐயும் திருப்பூர் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியபின் மண்டல அலுவலகத்திலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி மண்டல அலுவலகத்திலுள்ள பழைய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த உத்திரவு வழங்கி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். (இ.1 / 141 / 2017 / ம.4)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**--------**

**1071)** திருப்பூர் மாநகராட்சியில் 2016-17ம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீதம் தொகைகளை திரும்ப வழங்க கோரி ஸ்ரீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (பி) லிமிடெட் அவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி ஒப்பந்ததாரர் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் காலங்கடந்த வைப்பு தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே வைப்பு தொகை ரூ.747403/-யை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம் (பி.5 / 2304 / 2020)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**--------**

**1072)** திருப்பூர் மாநகராட்சியில் மிடுக்கான நகரம் ( SMART CITY MISSION ) திட்டத்தின் கீழ் பூமார்க்கெட் வளாகத்தினுள் பூ மார்க்கெட் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட வளாகத்தினுள்ள உள்ள 5 அரச மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ந.க.எண்.1574 / 2020/அ.3-ல் அனுமதி அளித்துள்ளார். எனவே மேற்கண்ட மரங்களை பொது ஏலம் நடத்தி வெட்டி அப்புறப்படுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 6630 / 2017)

------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

**--------**

**1073)** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி 2018-19-ன் கீழ் வார்டு எண்.50, தென்னம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கலையரங்கம் கட்டுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.10,85,000/-க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு 27-03-2020 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 22-05-2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு.A.ராஜேஷ்குமார் | 9,89,588/- | மதிப்பீட்டு விலையை விட 6.67% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | திரு.K.விஜயகுமார் | 10,15,090/- | மதிப்பீட்டு விலையை விட 9.42% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையை விட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு.A.ராஜேஷ்குமார் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 346 / S / 2019-20. நாள் 26-05-2020-ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்துதர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 28-05-2020-ம் தேதிய கடிதத்தில் இனம் எண்.10-ல் ரூ.85/-க்கு பதிலாக ரூ.80/-க்கு மற்றும் இனம் எண். 13-ல் ரூ.85/-க்கு பதிலாக ரூ.80/-க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு.A.ராஜேஷ்குமார் (விலைக்குறைப்புக்கு பின்) | 9,73,738/- | மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.96% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்களின் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும் விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையைவிட4.96%அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( ம.எண்.346 / S / 2019 - 20)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

**திருப்பூர் மாநகராட்சி**

**2020 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**1074)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1, செட்டிபாளையம் கிராமம் வார்டு எண்.3, க.ச.எண்.235/1, 244/1-ல் அமைந்துள்ள 1.66 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து திரு.P. விஜயன், என்பவர் விண்ணப்பித்து இருந்ததின் பேரில் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் ந.க.எண்.1020/2019/தி.உ.தி.கு. நாள் 31-07-2019-ந் தேதிய கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தின்படி குடிநீர் பிரதானக் குழாய் மழைநீர்வடிகால் சிறுபாலம், தார்சாலை ஆகியவை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தரத்தில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க ரூ.3,15,000/- மாநகராட்சிக்கு செலுத்து சீட்டு எண். 032 / 501 / 5 / 20-21 / 0000703 நாள் 23-06-2020-ல் செலுத்தப்பட்டு உள்ளது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதலளித்துள்ள சாலை வரைபடத்தின்படி உத்தேச மனைப்பிரிவு சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்புக்கு தானமாக தான சாசன பத்திரம் எண்.5177 / 2020, நாள் 14-07-2020-ல் பதிவு செய்து வழங்கியுள்ளார். உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் இறுதி ஒப்புதல் வழங்கப்படும் வரைபடம்படி இறுதி அங்கீகாரம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** :

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள சாலை வடிவமைப்பு வரைபடத்தின்படி அமைக்கப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக ஏற்றுக் கொண்டும், உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் வழங்கப்படும் இறுதி ஒப்புதலின்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 2826 / 2019 / ம.1)

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

--------

**1075)**இம்மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணியமைப்பின்கீழ் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.அ.அமுல்ராஜ் என்பவர் தனது தாயார் காலமாகிவிட்ட நிலையில் தனது வயதான தந்தையை கவனிக்க யாரும் இல்லாததாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும், தனக்கு தூத்துக்குடி மாநகராட்சிக்கு அயற்பணி ( Deputation Work) அடிப்படையில் பணி மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார்.

**1075-ன் தொடர்ச்சி**

எனவே திரு.அ.அமுல்ராஜ், இளநிலை பொறியாளரை தூத்துக்குடி மாநகராட்சிக்கு அயற்பணியில் ( Deputation Work) செல்ல மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம் **(** சி.2 / 3988 / 2020)

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1076)** வார்டு எண்.60-ல் சின்னான்டிபாளையம் தரைமட்ட தொட்டி முதல் கோழிப்பண்ணை வரை குடிநீர் பிரதானக்குழாய் பதித்தல் மற்றும் கிரின் அவென்யூ பகுதியில் குடிநீர் விநியோகக் குழாய் பதித்தல் பணி துவங்கப்படவில்லை. மேற்கண்ட பணி IUDM 13-14 திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பணியாகும். நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் ROC.NO. 3515/E1 தேதி 27-02-2020-ல் IUDM 13-14 திட்டத்தில் தேர்வு செய்து துவங்கப்படாத பணிகளில் AMRUT திட்டத்தில் செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். ஆகவே மேற்கண்ட பணி துவங்கப்படாமல் உள்ளதால் அதனை AMRUT திட்டத்தில் மேற்கொள்ளவும், IUDM 13-14 திட்டத்தில் உள்ளதை ரத்து செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம் ( ம.எண்.253 / S / 2013 -14)

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1077)** திருப்பூர் மாநகராட்சி குடிநீர்ப்பிரிவில் இரண்டு குடிநீர் திட்டங்களில் பெறப்படும் குடிநீரினை நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்கள் வாயிலாக மேல்நிலைத் தொட்டியிலிருந்து பகிர்மானம் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்நீரேற்று மற்றும் நீருந்து நிலையங்களை பராமரிக்க போதிய பணியாளர்கள் இல்லாததால் மேற்படி பணிகளை தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் பெறப்பட்டு குடிநீர் பணிகள் நடைபெற்று வருகிறது. ஒப்பந்த காலம் 31-07-2020 உடன் முடிவடைவதால் செயல்திறனற்ற பணியாளர்கள் 80, இரவுக் காவலர்கள் 18 மற்றும் கீளினர்கள் 7 ஆக மொத்தம் 105 பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01-08-2020 முதல் 31-10-2020 வரை மூன்று மாதங்களுக்கு திருவாளர் ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தாருக்கு அதே ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்ததாரருக்கு அதே விலை விகிதத்தில் 105 பணியாளர்களை பெற ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) கோவிட்-19 தொற்று தடுப்பு நடவடிக்கை காரணமாகவும், தேசிய பேரிடரான காலமாக உள்ளதாலும் போதிய கால அவகாசமின்றி மேற்காண் ஒப்பந்தத்தினை மேலும் 3 மாத காலத்திற்கு 01-08-2020 முதல் 31-10-2020 வரை ஒப்பந்தத்தை கால நீட்டிப்பு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காண் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ.1 / 5929 / 2018)

------

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1078)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1, வார்டு எண்.01 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் மின்விசை பம்புசெட் பொருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக நடைமுறைகளில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கவும், குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கவும், செலவினத்தை சிக்கனப்படுத்தவும், சீரான முறையில் கிணற்றுநீர் விநியோகத்தினை மேம்படுத்தவும், மின்சாரத்தினை சேமிக்கவும் நிர்வாக நலன் கருதி மேற்காண் மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த முறையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒப்பந்த காலம் August-2020 மாதத்துடன் முடிவடைவதால், ஆண்டு பராமரிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு ( September - 2020 to August 2021) ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணியினை தலா 5 வார்டுகள் வீதம் 3 சிப்பங்களாக தொகுத்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு.

| Sl.No | Name of work | Estimate Amount Rs.in lakhs |
|---|---|---|
| 1. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells, Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.01,02,03,04, & 05 ( 104 Nos) | 27.50 |
| 2. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.06,07,08,09 & 10 ( 135 Nos) | 36.00 |
| 3. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.11,12,13,14 & 15 ( 195 Nos) | 52.00 |

மேற்காண் மூன்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீட்டு செலவினத்திற்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மாமன்ற அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் அத்தியாவசியம் அவசரம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காண் மதிப்பீட்டுச் செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ.1 / 3933 / 2020)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**--------**

**1079)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.16 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் மின்விசை பம்புசெட் பொருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. நிர்வாக நடைமுறைகளில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கவும், குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கவும், செலவினத்தை சிக்கனப்படுத்தவும், சீரான முறையில் கிணற்றுநீர் விநியோகத்தினை மேம்படுத்தவும், மின்சாரத்தினை சேமிக்கவும் நிர்வாக நலன் கருதி மேற்காண் மின்விசை பம்புசெட்டுகளை ஒப்பந்த முறையில் ஓராண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒப்பந்த காலம் August-2020 மாதத்துடன் முடிவடைவதால், ஆண்டு பராமரிப்பு பணியினை ஓராண்டு காலத்திற்கு (September - 2020 to August 2021) ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேற்படி பணியினை தலா 5 வார்டுகள் வீதம் 3 சிப்பங்களாக தொகுத்து மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விபரம் பின்வருமாறு.

**1079-ன் தொடர்ச்சி**

| Sl.No | Name of work | Estimate Amount Rs.in lakhs |
|---|---|---|
| 1. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells, Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.16,17,18,19, & 20 ( 123 Nos) | 32.30 |
| 2. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.21,22,23,24 & 25 ( 168 Nos) | 43.15 |
| 3. | Annual Maintenance of Power Pumps Erected in Borewells Inclusive repairing of Motor and pump sets and attending the leakage in Distribution Pipeline in Ward No.26,27,28,29 & 30 ( 88 Nos) | 22.60 |

மேற்காண் மூன்று பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீட்டு செலவினத்திற்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மாமன்ற அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் அத்தியாவசியம் அவசரம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காண் மதிப்பீட்டுச் செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ.1 / 2383 / 2020 )

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**1080)**திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.19, நல்லாத்துப்பாளையம் ஏ.டி.காலனி பகுதியில் புதிதாக தார்தளம் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.38,10,000/-க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மாமன்ற தீர்மான எண்.917, நாள் 04-03-2020 வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23-06-2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 29,56,251/- | நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட 0.06% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. எஸ்.ஆர்.பி. அன் கோ., | 30,37,032/- | நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தைவிட 2.67% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தை விட 0.06% குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**1080-ன் தொடர்ச்சி**

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தை விட 0.06% குறைவாக குறிப்பிட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

( ம.எண். 255 / N / 2019-20)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**--------**

**1081)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.19, பூலுவப்பட்டி குட்டை முதல் எஸ்.டி.கம்பெனி சாலை வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.57,00,000/-க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மாமன்ற தீர்மான எண்.913, நாள் 04-03-2020 வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23-06-2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | M/s. சித்ரவர்ஷினி அண்ட் கோ., | 53,31,685/- | நடப்பாண்டு (2020-21) செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட 017% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 2. | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 53,38,950/- | நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட 0.03% குறைவு | இணைக்கப்பட்டு உள்ளது. |
| 3. | திரு.V.அருணாசலம் | 54,41,280/- | நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலை விகிதத்தை விட 1.88% அதிகம் | இணைக்கப்பட்டு உள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியான M/s. சித்ரவர்ஷினி அண்ட் கோ., நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நடப்பாண்டு ( 2020-21) செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தை விட 0.17% குறைவாக உள்ளதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து, மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

